# தேம்பாவணி காட்டும் அறம்

***முனைவர் சி. ஆன்சி மோள்***
தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதி)
ஹோலிகிராஸ் கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில்
கன்னியாகுமரி மாவட்டம்

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6400

***முன்னுரை***

*கிறிஸ்தவ சமயத்தார் தமிழுக்கு அளித்த இலக்கியக் கொடைகளில் முதன்மை பெறுவது தேம்பாவணி ஆகும். இதனைத் தந்தவர் இத்தாலிய நாட்டுக் கவிறுர் ஜோசப் பெஸ்கி என்ற வீரமாமுனிவா ஆவார். சுப்பிர தீபக் கவிராயம் என்பவரிடம் தமிழ் பயன்றார். தான் பெற்ற தமிழ்ப்புலமையால் சூசையப்பர் வரலாற்றை செந்தமிழ்க் காவியமாக தேம்பாவணி என்ற பெயரில் இயற்றினார் மதுரைத் தமிழ்ச்சங்கம் இந்நூலின் நயங்களைப் பாராட்டி அவருக்கு வீரமாமுனிவர் என்ற பட்டம் அளித்தது. இந்நூல் 3 காண்டங்களையும் 3615 செய்யுட்களையும் 36 படலங்களையும் கொண்டது. இந்நூல் காட்டும் அறங்களைப்பற்றியது இவ்வாய்வின் நோக்கமாகும்.*

***ஆசிரியரின் அறம்***

ஆசிரியர் எனப்படுவோர் தான் முதலில் நன்கு கல்வியை கற்றப் பிறகு மாணவர்களுக்கு ஐயம் ஏற்படாத வண்ணம் கல்வியை புகட்ட வேண்டும். இதனைத் தேம்பாவணி இயற்கைக் காட்சியை வருணிக்கும் பொழுது இவ்அறக் கருத்தை வலியுறுத்துகிறது.

***"படித்தநூல் அவை பயன்பட விரித்துரைய பவர்போல்***
***தடித்தநீல் முகில் தவழ்தலை பொலிந்த பொன் மலையே***
***குடித்த நீரெல்லாம் கொப்புளித்து அமுதென அருவி***
***இடித்து அறாஒலி எழுத்திரை எறிந்து உருண்ட இரிவ''***

**தேம்பாவணி (நாட்டுப்படலம், பா.4)**

இப்பாடலில் ஆசிரியருக்கு உரிய அறம் கூறப்படுகிறது. மேகநீரை மலை வாங்கிக் கொண்டு அருவியாக கொப்பளித்தல் என்ற உவமை மூலம் அந்த அறம் விளக்கப்படுகிறது. அதாவது ஒரு ஆசிரியர் தான் கற்பிக்கக் கூடிய பாடத்தை உள்வாங்கிக் கொண்டு மாணவர்களுக்கு நல்ல ஓசை இன்பத்தோடு விரிவாக எடுத்துரைக்க வேண்டும் என்ற அறம் கூறப்படுகிறது. ஆசிரியர்களின் இவ்வறத்தை நாலடியார்

***"தோணி இயக்குவான் தொல்லை வருணத்துக்***
***காணிற் கடைப்பட்டான் என்றிகழார் காணாய***
***அவன் துணையா ஆறுபோய் அற்றே நூல் கற்ற***
***மகன் துணையா கொளல்''***

***(பாடல் – 136)***

என கூறகிறது.

### ஐம்பொறிகள் அடக்கும் அறம்

மனிதனின் வாழ்வுக்கு துன்பம் தருவன ஐம்புலன்களால் ஏற்படும் உணர்வுகளாகும். அவ்வுணர்வுகளை அடக்கி வாழ்வது தான் சான்றோர்களாகிய முனிவர் பெருமக்களின் அறமாகும். இதனை தேம்பாவணியின் கீழ்வரும் பாடல் உணர்த்துகிறது.

**"செறி உலாம் புனல் சிறைசெய் பயன்பட ஒதுக்கி**
**வெறி உலாம் மலர் மிடைந்து அகல் வயல்வழி விடுவார்**
**பொறி உலாம் வழி போக்கிலது இயல்பட அடக்கி**
**நெறி உலாம் அறம்நேர், அவை நிறுத்தினர் போன்றே"**

***(நாட்டுப்படலம், பா-10)***

இப்பாடலில் இடம்பெறும் அறம் ஐம்புலன்களின் வழியோ மனம் செல்லாதவாறு தடுத்து அறவழியில் செலுத்துவது தான் மனித உயிரின் கடமையாகும்.

ஐம்புலன்களை அடக்கினால் நல்நெறியில் செல்லலாம் என்று சங்க இலக்கியங்களில் ஒன்றான அகநானூறு.

**"விழையா உள்ளம் விழையும் ஆயினும்**
**கேட்டவை தோட்டியாக மீட்டு ஆங்கு**
**அறனும் பொருளும் வழாஅமை நாடி"**

என்றுக் குறிப்பிடுகிறது.

### விருந்தோம்பல் அறம்

தமிழகத்தில் வழங்கி வரும் அறங்களில் தலைமையானது விருந்தோம்பல் அறம். வந்த விருந்தை உபசரித்து வரவிருக்கும் விருந்தை எதிர்பார்த்தல் தான் அறம். விருந்தோம்பல் அறத்தை வலியுறுத்தும் வண்ணம் தேம்பாவணியில் கீழ்கண்ட பாடல் அமைந்துள்ளது.

**"இருந்து ஓடிய திரு இங்கணில் இனிது அன்புற இடலால்**
**பருந்தோடுறும் நிழலென்று உயர் பயன் ஈன்றிடும் எனவே**
**மருந்தோடுஇகல் அரிதுஅன்பு, உளம் மலிகின்ற மரபோர்**
**விருந்தோடுஉண விருகின்றனர் இலையென்று உளம் மெலிவார்"**

***(நகரப்படலம். பா-63)***

இப்பாடல் கூறும் அறம் விருந்தினர்க்கு உணவு படைக்கும் அறம் பொருட் செல்வத்தை காக்கும். விருந்தினரைப் பெறமுடியாது எருசேலம் நகரத்து மக்கள் வாடுவதால் அறம் செய்யாத நிலை ஏற்படுகிறது. அதனால் பொருளின் பயனும் அறத்தின் பயனும் கிடைக்காமல் போய்விடுகிறதே என்ற அறக்கருத்து இடம்பெற்றுள்ளது.

வள்ளுவரும் விருந்தோம்பல் பற்றிக் கூறும் போது,

**"அகன் அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து**
**நல்விருந்து ஓம்புவான் இல்"**

***(குறள்: 84)***

எனக் குறிப்பிடுகிறது.

### இன்னா செய்தாரைப் பொறுத்தல் அறம்

உலகில் சமய நெறிகள் அனைத்தும் மக்களின் வாழ்வியலுக்கு ஏற்ற நெறிமுறைகளைக் குறிப்பிடுகின்றன. நெறிமுறைகளில் மிக இன்றியமையாததாக மன்னிக்கும் குணம் அனைவருக்கும் வேண்டும் என்பதாகும். தேம்பாவணியில் இக்கருத்தை வலியுறுத்தும் பாடல் கீழ்வருமாறு அமைந்துள்ளது.

**"துய்யம் தாய்உரித் தொடர்பினார், சுடப்புகன் றவர்க்கும்**
**மய்யம் தாவிய மனத்துஎழும் அன்பின் நன்று இயற்றல்**
**நெய்அம் தாதுகள் நோவ, உள் குடைந்து இமிர் அளிக்கும்**
**செம்அம் தாமரை நினைப்ப நல் விருந்து இடும் போன்றே"**

***(ஈரறம் பொருத்தம் படலம், பா-60)***

என தேம்பாவணி தெளிவுப்படுத்துகிறது.

**"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண**
**நன்னயம் செய்த விடல்"**

***(குறள்: 314)***

என்று வள்ளுவர் கோட்பாட்டு அறம்

உலகச்சமயங்கள் அனைத்தும் ஏற்றுக் கொண்ட கோட்பாடு வினைக்கோட்பாடு ஆகும். முன்வினைப் பயனை அடுத்த பிறவியில் அனுபவிப்பதும் இப்பிறவியில் செய்த வினையின் பயனை அடுத்த பிறவியில் அனுபவிப்பதும் வினைக்கோட்பாடாகும்.

***"வினைமுதிர்ந்து விளித்தினர ஆவிபோய்***
***முனைமுதிர்ந்த அழல் முதிர் புதியில்***
***கனைமுதிர்ந்த பனிப்போடு எக் காலமும்***
***புனைமுதிர்ந்த சிறை புதைந்து ஓவுமால்"***
***(காண்டம் – 3, பாடல் – 86)***

இவற்றால் உணர்த்தப் பெறுகின்ற அறம் ஒரு பிறப்பில் தீவினை செய்தவர்கள் நரகத்தில் வீழ்ந்து துன்பப்படுவர். நல்வினை செய்தவர்கள் தங்கள் தவத்தால் துன்பத்திலிருந்து நீங்கி பேரின்பத்தை அடைவர். தீயவராகவும் நல்வலராகவும் வாழ்ந்தவர்கள் அனுபவிக்க வேண்டிய துன்பங்களை அனுபவித்த பிறகு இறையரளைப் பெறுவர் என்ற அறக்கருத்து கூறப்படுகிறது.

ஊழ்வினைப் பற்றி சிலப்பதிகாரத்தில் கூறும்போது கோவலனின் இச்சிறப்புக்கு காரணம் அவனது முற்பிறப்பு என்பதை இளங்கோவடிகள்,

***"காவலன் செங்கோல்***
***விளைஇய வீழ்ந்தனன்***
***கோவலன் பண்டை***
***ஊழ்வினை உருத்தென் (216, 217)"***

என தெளிவுப்படுத்தியுள்ளார்.

## முடிவுரை

பிறநாட்டைச் சார்ந்த நல்லறிஞர்கள் தமிழக்கு அளித்த கொடைகளில் முதன்மையானது வீரமாமுனிவர் தந்த தேம்பாவணிக் காவியம் ஆகும். அறத்தை வலியுறுத்தும் வண்ணம் தமிழ் மக்களின் அறக்கோட்பாடுகளைத் தேம்பாவணி தன்னகத்துக் கொண்டு விளங்குகிறது. அவற்றில் ஒரு சிலவற்றை இக்கட்டுரை எடுத்துக்காட்டியுள்ளது. இதன் மூலம் தேம்பாவணியின் சிறப்பையும், அயல் நாட்டவரின் தமிழ் உணர்வையும் அறிய முடிகிறது.

## துணை நூற்பட்டியல்


1. வீரமாமுனிவர் இயற்றி தேம்பாவணி முதல்காண்டம் - புலவர் சே. சுந்தரராசன்.
2. வீரமாமுனிவர் அருளிய தேம்பாவணி (நாட்டுப்படலம், நகரப்படலம்) உரையாசிரியர்: செந்திக்குமார். திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி – 6, சென்னை – 1, 1965.
3. வீரமாமுனிவர் அரளிச்செய்த தேம்பாவணி மூன்றாங்காண்டம் வித்துவான் ரா.லே. ஆரோக்கியம்பிள்ளை, தூத்துக்குடி மாவட்டம், முதற்பதிப்பு: 2 டிசம்பர் 1964.
4. சிலப்பதிகாரம் ஒர் எளிய அறிமுகம், சுஜாதா முதற்பதிப்பு : 2013.
5. திருக்குறள் ஒரு அறிமுகம் - முனைவர் ஜெயபாரதி, மதுரை.
6. அகநானூறு மூலமும் உரையும் - ரா. இராகவையங்கார் முதற்பதிப்பு - 1923.
7. நாலடியார் உணர்த்தும் ஈகை நெறிகள், முனைவர் சு. ஜெனிபர் தமிழியல் துறை பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி - 24.